பாழடைந்த வீடு



பாழடைந்த வீடு

சில நேரங்களில் தாங்கள்
கைவிடப்பட்டதாக
நினைத்துக்கொள்ளும்
குழந்தைகளின் மனதைத் தொடும்
இந்த கதை



ஒரு ஊரில் ஒரு
பாழடைந்த வீடு
இருந்தது.




தன்னிடத்தில் நீண்ட காலம் யாரும் வசிக்காததால் அந்த வீடு மிகவும் வருத்தமாக இருந்தது.

இடிந்து கிடந்த அதன் வாசலை கடந்து போகும் மக்கள் எல்லோரும், "இதுபோன்ற ஒரு பரிதாபமான வீட்டை எங்காவது பார்த்திருக்கிறீர்களா?" என்று பேசிக்கொள்வார்கள்.

வீட்டின் நண்பர்கள் அதை உற்சாகப்படுத்த முயன்றனர்.

"நீங்கள் எவ்வளவு பயனுள்ளதாக இருக்கிறீர்கள். உங்கள் கூரையின் இடுக்குகள் கூடுகட்ட வசதியாக இருக்கின்றன." என்று பறவைகள் கூறின.



"அது மட்டுமல்ல, மிகவும் கருணையுடன் இருக்கிறீர்கள். நான் ஒளித்து வைக்கும் கொட்டைகளை பத்திரமாக பார்த்துக் கொள்கிறீர்கள்." என்று கூறியது அணில் .





"உங்கள் முன்முற்றம் எங்களுக்கு ஏற்ற மாதிரி அழகாக இருக்கிறது. நீங்கள் இல்லாமல் நாங்கள் அனைவரும் என்ன செய்வோம்?" என்று காட்டு மலர்கள் கொஞ்சின.



"யார் என்ன சொன்னாலும் நாங்கள் எல்லோரும் உன்னை நேசிக்கிறோம்." என்று அணைத்துக் கொண்டது தேக்குமரம்.

"வருந்திக்கொண்டே இருப்பது நல்லதல்ல" என்று நண்பர்கள் அனைவரும் சொன்னார்கள்.

ஆனால் எந்த பயனும் இல்லை. "நான் தனியாக இருக்கிறேன்," என்று அந்த பழைய வீடு புலம்பிக்கொண்டே இருந்தது.

சில சமயம் பழைய வீட்டை வாங்க வரும் சிலரும் ஏமாற்றத்துடன் திரும்புவர்.

"குறைந்த விலையில் கிடைத்தால் கூட இப்படிப்பட்ட பாழடைந்த வீட்டில் வாழ ஒரு பைத்தியக்காரன் மட்டுமே ஆசைப்படுவான்" என்று ஒரு தம்பதி பேசிக்கொண்டனர்.

"என்ன? எனது மதிப்பு குறைந்துவிட்டதா?" என்று அலறிய பழைய வீடு வெறுப்புடன் ஜன்னல் கதவுகளை படாலென மூடிக்கொண்டது.



" இந்த உலுத்துப்போன வீட்டை அப்படியே இடித்துவிட வேண்டும்" என்று திட்டினார் ஒருவர்.

பழைய வீடு இதுபோன்ற வசவுகளைக் கேட்கும்போது, கண்ணீர்விட்டு அழும். அந்தக் கண்ணீரில் கதவுகளும் நிலைகளும் நனைந்து சொதசொத என்றாகி எல்லா இணைப்புகளிலும் பெரும் வலி ஏற்படும். அந்த நேரங்களில் நண்பர்களும் கூட பயத்துடன் நடுங்குவார்கள்.




ஒரு நாள் இடிந்துபோன வாயிலுக்கு அருகில் ஒரு குடும்பம் வந்து நின்றது.

"ஓ, இதுபோன்ற அற்புதமான, பழைய வீட்டில் வசிக்க வேண்டும் என்பது தான் என் கனவு." என்றார் அம்மா.

"நாம் இதுவரை இப்படி ஒரு வீட்டில் வாழ்ந்ததே இல்லை" என்ற சிறுவன் " உள்ளே போய் பார்க்கலாமா?" என்று கேட்டான்.

அப்போது அந்த பழைய வீடு சத்தமாக ஒரு சோகப் பெருமூச்சு விட்டது.



"ஓ இது என்ன சத்தம்? மிகவும் உலுத்துவிட்டது என்று நினைக்கிறேன். " என்றார் அப்பா.

"இல்லை!" என்று மறுத்தாள் சிறுமி. "இது நம்மை ஹலோ என்று வரவேற்கிறது, அவ்வளவுதான்."

அணில் வீட்டிடம் மெதுவாக சொன்னது. "அவர்கள் பேசுவதைக் கேட்டீர்களா? இது உங்களுக்கு ஒரு நல்ல வாய்ப்பு! "

ஆனால் பழைய வீடு நொந்துபோயச் சொன்னது “இதோ! மற்றவர்களைப் போலவே, அவர்களும் திரும்பிச் போகிறார்கள்."



ஆனால் அடுத்த வாரம் அந்தக் குடும்பத்தினர் மீண்டும் வந்தார்கள். எல்லோரும் அந்த வீட்டை மிகுந்த ஆசையுடன் பார்த்தார்கள்.

"இங்கே நான் ஒரு டயரைத் தொங்கவிட்டு ஊஞ்சல் ஆடுவேன்" என்று தேக்கு மரத்தைப் பார்த்து சொன்னான் சிறுவன்.






"பறவைகளின் கூடுகளைப் பாருங்கள். இந்த வீடு அதன் நண்பர்களுக்கு எவ்வளவு இடம் கொடுத்துள்ளது."என்றார் அம்மா

"இந்த காட்டு பூச்செடிகளைச் சுற்றி வளரும் புல்லை வெட்டுவேன். பின்னர் இந்த செடிகளுக்கு நிறைய சூரிய ஒளி கிடைக்கும்" என்றாள் சிறுமி .



"வீடு ஒரு பக்கமாக சாய்ந்திருக்கிறதோ? அதன் அஸ்திவாரம் பிளந்துவிட்டதோ என்னவோ?" என்றார் அப்பா.

"மன்னிக்க வேண்டும்! என் அஸ்திவாரம் நன்றாகத் தான் இருக்கிறது." என்று பழைய வீடு கோபமாக கூச்சலிட்டது.




"அப்படியானால் குனியாமல் நிமிர்ந்து நில்லுங்கள்" என்றது அணில்.

"உணர்ச்சிகளை கட்டுப்படுத்துங்கள். ஜன்னல்கள் பிரகாசமாக மின்னவேண்டும்" என்றது தேக்கு.

பறவைகள் "அவர்கள் எவ்வளவு ஏமாந்து போவார்கள் என்று சற்று யோசித்துப் பாருங்கள்!" என்றன.

"உங்களால் முடியும்!" காட்டு பூக்கள் மென்மையாக சொன்னது .



பழைய வீடு அம்மாவின் வாடிய முகத்தை, குழப்பத்துடன் நின்ற தந்தையை, ஆர்வமாக கவனிக்கும் பையனையும் சிறுமியையும் பார்த்தது. அம்மாவின் கையிலிருந்த குழந்தை சிணுங்குவதையும் கேட்டது.

இந்த குடும்பத்திற்கு நான் தேவை என்று நினைத்து ஏக்கப் பெருமூச்சு விட்டது.



தனது முழு
சக்தியையும் திரட்டி,
நெட்டி முறித்து
சிலுப்பிக்கொண்டு
நேராக நிற்க
முயற்சித்தது வீடு.

"வீடு நேராகத் தான் இருக்கிறது" என்றான் சிறுவன்.

“ஆமாம். நிழலைப் பார்த்து அப்படி நினைத்துவிட்டேன்” என்றார் தந்தை.

சிறுமி தன் பெற்றோரைப் பார்த்து, "இந்த வீட்டை நாம் வாங்க முடியுமா?"என்று கேட்டாள்.

"ஒரு வீடு வாங்கத் தான் பணத்தை சேமித்து வருகிறோம், ஆனால் இந்த வீட்டை சரிசெய்ய நிறைய உழைக்க வேண்டும்,“ என்றார் அம்மா.

"வீடு முழுக்க பழுது பார்க்கவேண்டும்" என்றார் தந்தை.



பேசிக்கொண்டே குடும்பம் கிளம்பியது.

"இருங்கள்! போகாதீர்கள்! நாம் அனைவரும் ஒன்றாக மகிழ்ச்சியுடன் வாழ முடியும்." என்று பழைய வீடு கூச்சலிட்டது.

ஆனால் அவர்கள் போய்விட்டார்கள்.



பழைய வீடு மிகவும் சோகமாக இருந்தது."நான் அவர்களின் வீடாக மாறி அவர்களைப் வெய்யிலிலும் மழையிலும் இருந்து பாதுகாத்திருக்க முடியும்." என்று துக்கத்துடன் சொன்னது.

"வீடு தன்னை நினைத்து வருத்தப்படுவதை நிறுத்திவிட்டு, அந்த குடும்பத்திற்காக வருத்தப்படுவதை பார்த்தீர்களா? "என்று அணில் தேக்கு மரத்திடம் சொன்னது.

"ஆமாம். ஏதோ அந்தமட்டுக்கு நல்லது தான்!" என்றது தேக்கு மரம்.

ஒரு நாள் சாலையின் ஒரு முனையிலிருந்து ஒரு பெரும் உறுமல் கேட்டது.

"புல்டோசர் வருகிறது! அய்யோ! என்னை இடிக்கப் போகிறார்கள்" என்று கதறியது அந்த வீடு.

"இன்னும் பறக்க தெரியாத குஞ்சுகள் இருக்கும் எங்கள் கூடுகளை யார் காப்பாற்றுவார்கள்?" என்று பறவைகள் ஓலமிட்டன.

"எங்களை மண்ணோடு நசுக்கிவிடுவார்களே " என்று காட்டு பூக்கள் அழ ஆரம்பித்தன.



"அவர்கள் என்னை வெட்டிச் சாய்க்கப் போகிறார்கள். விடைகொடு, என் நல்ல நண்பனே " என்றது தேக்கு மரம்.

அவர்கள் அனைவரும் பயத்தினால் நடுங்கத் தொடங்கினர்.



திடீரென்று பழைய வீடு பயத்துடன் நடுங்குவதை நிறுத்தி விட்டு "ஏய்!" என்று மகிழ்ச்சியுடன் கூச்சலிட்டது.

"வந்திருப்பது புல்டோசர் இல்லை , என் குடும்பம்! “

ஆம் ! வந்தது , அந்த குடும்பம் தான் !



பழைய வீட்டின் ஜன்னல்களை அம்மா துடைத்து மெருகேற்றியதில் அவை வைரங்கள் போல மின்ன ஆரம்பித்தன. ஜன்னல் சட்டங்களுக்கு அவர் பிரகாசமான வெள்ளை வண்ணத்தை பூசினார்.
தந்தை பழுதாகியிருந்த பலகைகளுக்கு பதிலாக புதிய பலகைகளைப் பொருத்தினார் . அவர் கூரை ஓட்டைகளை அடைக்கும்போது பறவை குஞ்சுகள் பார்த்துக் கொண்டே இருந்தன.
"என் கஷ்டங்கள் எல்லாம் போய்விட்டது!" என்று உற்சாகமாக பாடியது பழைய வீடு.
சிறுவன் தேக்கு மரத்தில் ஆடிக் கொண்டிருந்த போது, அணில் தன் பிள்ளைகளோடு ஒளிந்து விளையாடிக் கொண்டிருந்தது.
காட்டுப் பூக்களைச் சுற்றி வளரும் புல்லை வெட்டி பூக்கள் சூரிய ஒளியைப் பெற வைத்தாள் சிறுமி. தினமும் பறவைகள் சாப்பிடுவதற்காக தானியங்களையும் தூவி விட்டாள்.

குடும்பத்தின் கடின உழைப்பில், பழைய வீடு புதுப்பொலிவு பெற்று புதிய வீடாய் மாறியது.



இப்போதும் அவ்வப்போது பழைய வீடு குலுங்குகிறது, ஆனால் துன்பத்தினால் அல்ல, இன்பத்தினால்! ஏனென்றால் இப்போது அங்கு அன்பும் மகிழ்ச்சியும் நிறைந்திருந்தது.

இப்போது வீட்டைக் கடந்து போகும் மக்கள் "இதுபோன்ற மகிழ்ச்சி நிறைந்த வீட்டை பார்ப்பதே அரிது" என்கிறார்கள்.

முற்றும்